IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Deposition of Pw 3

| | |
|---|---|
| CMP. No. | 2127/2024 |
| Name | Kulainthaisamy |
| Father's Name | Muthusamy |
| Village | Mullampatti |
| Taluk | Perundurai |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 25.09.2025.

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 07.10.2023 ம் தேதி சிவகாமி அவர்களை பற்றி சன்டிவியில் வடிகால் வாரியம் கட்டாமலேயே கட்டியதாக சொல்லி ரூ.2,33,000/- முறைகேடு செய்து விட்டதாக பிளக்ஸ் வைத்து வடிகால் வாரியத்தை காணவில்லை எனவும், கண்டுபிடித்து தருபவர்களுக்கு ரூ. 1 இலட்சம் சன்மானம் கொடுக்கப்படும் என பேஸ்புக், வாட்ஸ்அப்பிலும் பதிவேற்றம் செய்து விட்டார்கள். மேற்படி செயலை செய்தது சிவகாமியை எதிரித்து தோல்வியடைந்த மணிமேகலை, கிருஷ்ணமூர்த்தி, தினேஷ்குமார், சதீஷ்குமார், சண்முகசுந்தரம், சிவசுப்பரமணி, துளசிமணி, மகேந்திரன் ஆகியோர்கள் தான் மேற்படி செயலை செய்தவர்கள் ஆவார்கள். அதனால் சிவகாமிக்கு மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டது.

2. 12.08.2020 ம் தேதி முள்ளம்பபட்ட ஊராட்சி நீதிமன்ற அலுவலர் குடியிருப்புக்கு வடிகால் வாரியம் அமைக்க வேண்டும் என ஊராட்சியில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 21.12.2020 ம் தேதி அதற்காக டென்டர் விடப்பட்டது. 2021 ம் ஆண்டிலேயே அதற்கான பணிகள் முழுமையடைந்து விட்டது. 2 வருடம் கழித்து 07.10.2023 ம் தேதி அவதூறு பரப்பினார்கள். சிவகாமி ரூ. 2,33,000/- செலவு செய்து வடிகால் வாரியம் அமைத்து தற்போது பயன்பாட்டிலும் இருந்து வருகிறது. தலைவர் பேருக்கு கலங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று பொய் பிரச்சாரம் செய்தார்கள்.

09.10.2023 ம் தேதி சிவகாமி ஊராட்சி மன்ற உறுப்பினர்களுடன் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடமும் இது தொடர்பாக புகார் அளித்துள்ளார். நான் முள்ளம்பட்டியை சேர்ந்தவர் என்பதாலும், முள்ளம்பட்டியின் ஊராட்சியின் முன்னாள் தலைவர் என்பதாலும், வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட விவரம் மேற்படி நபர்கள் சிவகாமி மீது அவதூறு பரப்பியதும் எனக்கு நேரடியாக தெரியும்.

என்முன்னால்

நீதித்துறை நடுவர்

பெருந்துறை.